உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 25.06.2026 • மலர் 04 • இதழ்: 176 • வியாழக்கிழமை • Edition : Nagercoil • 25.06.2026 • Vol : 04 • Issue : 176 • Page : 4 • Rs. 5/-

### வளரும் நாடுகளுக்கு முன்னுரிமை,

# உலகின் பாதுகாப்புக்கு பங்களிப்பதே இந்தியாவின் நோக்கம்

## பிரதமர் மோடி பேச்சு

புதுடெல்லி, ஜூன் 25

பிரிக்ஸ் நாடுகளான பிரேசில்,ரஷியா, இந்தியா,சீனா, எகிப்து, எத்தியோப்பியா, இந்தோனேசியா, ஈரான், சவுதி அரேபியா, தென்னாப்பிரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் கூட்டம் டெல்லியில் நேற்று தொடங்கியது. 2 நாட்கள் நடைபெறும் இந்த கூட்டத்துக்கு இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் தலைமை தாங்கினார்.

அதன்படி டெல்லியில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் மாநாடு நடைபெற்றது. கூட்டத்தில் பிரதமர் மோடி பிரிக்ஸ் அமைப்பு நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களுடன் கலந்துரையாடினார். இந்த சந்திப்பின் போது, வளர்ந்து வரும் பொருளாதார சூழலுக்கு மத்தியில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு பிரிக்ஸ் ஒரு முக்கிய தளமாக உருவெடுத்து உள்ளது என்றார்.

சந்திப்பு குறித்து பிரதமர் மோடி எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளவதாவது: பிரிக்ஸ் கூட்டமைப்பு நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள், மூத்த பாதுகாப்பு அதிகாரிகளைசந்தித்ததுமகிழ்ச்சி.

இவ்வுலகில் பயங்கரவாதம், இணைய பாதுகாப்புகள் மாற்றங்களுடன் காணப்படுகின்றன. தொழில்நுட்ப சவால்களை எதிர்கொள்ளுதல், பாதுகாப்புக்கான ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் ஆகிய அம்சங்களில் பிரிக்ஸ் கூட்டமைப்பு முக்கிய பங்காற்றி வருகிறது.

வளரும் நாடுகளின் முன்னுரிமைகளுக்கு ஆதரவளித்தல், பாதுகாப்பான உலகை உருவாக்குதல் போன்றவற்றில் பங்களிப்பதே இந்தியாவின் நோக்கம். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என அதில் பதிவிட்டுள்ளார்.





## முதல்வர் பிறந்த நாளை நலத்திட்டங்கள் செய்து கொண்டாடிய போக்குவரத்து தொழிலாளர்கள்

மதுரை ஜூன் 25

தமிழக முதலமைச்சர் 52வது பிறந்தநாளையொட்டி, போக்குவரத்துத் தொழிலாளர்கள் ஒருங்கிணைந்து பல்வேறு நற்பணிகளை மேற்கொண்டனர். முன்னாள் அண்ணா தொழிற்சங்க மாநிலப் பேரவைத் தலைவரும், தற்போதைய தவெக வில் இணைந்தவருமான தாடி ம. இராசு தலைமையில், நேற்று மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் முதலமைச்சர் பெயரில் சிறப்பு அபிஷேகம் மற்றும் அர்ச்சனை செய்யப்பட்டு, அங்கு வருகை தந்த பக்தர்களுக்கு வெண்பொங்கல் பிரசாதமாக வழங்கப்பட்டது.

அதேபோல் மதுரை அன்னை சத்யா அம்மையார் நினைவு அரசு குழந்தைகள் இல்லத்தில் உள்ள ஆதரவற்ற குழந்தைகளுக்கு உணவு வழங்கப்பட்டது. இதில் மதுரைப் போக்குவரத்து மண்டலத்தைச் சேர்ந்த ராஜேஷ் சரவணன், நிர்வாகப் பணியாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் திரளாகக் கலந்துகொண்டனர்.இதனைத்தொடர்ந்து, அரிஜன் சேவக் சங் நினைவுப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு மாலை நேரச் சிற்றுண்டியும், இரவு உணவும் வழங்கப் பட்டன. இந்நிகழ்விலும் மதுரை மண்டல நிர்வாகிகள் அனைவரும் கலந்துகொண்டனர். இந்நிகழ்வானது விருதுநகர், கோவை, திருவண்ணாமலை போன்ற மண்டலங்களிலும் நடைபெற்றது.

### தருமபுரியில்

## சிறுவனை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்த தொழிலாளிக்கு இரட்டை தூக்கு தண்டனை

### தருமபுரி போக்சோ சிறப்பு கோர்ட் பரபரப்பு தீர்ப்பு

தருமபுரி ஜூன் 25

தருமபுரி மாவட்டம் கிருஷ்ணாபுரம் அருகே காட்டம்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் பிரகாஷ் (வயது 22) வெல்டிங் தொழிலாளி இவர் கடந்த 2023 ம் ஆண்டு ஜூலை மாதம் 18 ம் தேதி 7 வயது சிறுவனிடம் நைசாக பேச்சு கொடுத்து விளையாட அழைத்துள்ளார் .

இதை நம்பி அந்த சிறுவன் பிரகாஷ் உடன் சென்றான். சிறுவனை பிரகாஷ் பயன்பாடுயின்றி இருந்த மேல்நிலை நீர் தேக்க தொட்டி இருக்கும் பகுதிக்கு அழைத்துச் சென்றார். அங்கு சிறுவனின் உடைகளை அவிழ்த்து பாலியல் வன்கொடுமை செய்துள்ளார் .

இதில் அதிர்ச்சி அடைந்த அந்த சிறுவன் அவரிடம் இருந்து தப்பிக்க முயன்றுள்ளார். நடந்ததை சிறுவன் வெளியே சொல்லி விடுவான் என்று பிரகாஷ் அச்சமடைந்தார். எனவே தப்பித் சென்ற சிறுவனின் கழுத்தை நெரித்து பிரகாஷ் கொலை செய்தார். பின்னர் அவனது உடலை மேல்நிலை நீர் தேக்க தொட்டியில் மேலேயே விட்டு விட்டு பிரகாஷ் அங்கிருந்து தப்பிவிட்டார். இந்த நிலையில்

சிறுவனை காணாமல் தவித்த அவனது பெற்றோர் கிருஷ்ணாபுரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். அதன் பேரில் காவல்துறையினர் நடத்திய விசாரணையில் சிறுவன் பிரகாஷ் உடன் சென்றது தெரியவந்தது. காவல்துறையினர் பிரகாசை பிடித்து விசாரணை நடத்தினர். அப்போது சிறுவன் பாலியல் வன்கொடுமை, கொலை உள்ளிட்ட 4 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து காவல்துறையினர் பிரகாசை கைது செய்தனர். இந்த வழக்கு விசாரணை தருமபுரி மாவட்ட போக்சோ சிறப்பு கோட்டில் நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் 10 பக்கம் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, 23 சாட்சிகளிடம் விசாரணை நடந்தது.

விசாரணை அனைத்தும் முடிவடைந்த நிலையில் நீதிபதி அசின் பானு பரபரப்பு தீர்ப்பளித்தார். அதில் பிரகாஷ் மீது குற்றச் சாட்டுகள் உறுதி செய்யப்பட்டுள்ளது. சிறுவனை பாலியல் வன்கொடுமை செய்த குற்றத்திற்காக பிரகாசுக்கு தூக்கு தண்டனையும், ரூ.10,000 அபராதமும், சிறுவனை கொலை செய்த குற்றத்திற்காக மற்றொரு தூக்கு தண்டனையும், ரூ. 10,000 அபராதமும் விதிக்கப்பட்டது. இந்த அபராதத்தினை கட்ட தவறினால் தலா 5 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தார். பாலியல் வன்கொடுமை செய்து சிறுவன் கொலை செய்யப்பட்ட வழக்கில் தொழிலாளிக்கு இரட்டை தூக்கி தண்டனை விதித்து போக்சோ சிறப்பு கோர்ட் அளித்த தீர்ப்பு தருமபுரியில் பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது.



## ஈரோடு தாலுகா அலுவலகத்தில் நடந்த ஜமாபந்தி நிகழ்ச்சி

### 304 மனுக்களில் 150 மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை

ஈரோடு ஜூன் 25

ஈரோடு தாலுகா அலுவலகத்தில் கடந்த 17 ந் தேதி முதல் 23 ந் தேதி வரை ஈரோடு கோட்டாட்சியர் சிந்துஜா தலைமையில் ஜமாபந்தி நடந்தது. அப்போது பட்டா மாறுதல் உள்பட 304 மனுக்கள் பெறப்பட்டன இதில் 150 மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்கான உத்தரவு பொது மக்களுக்கு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் ஈரோடு தாசில்தார் முத்து கிருஷ்ணன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## போலீஸ் கமிஷனராக கக்கன் பேத்தி



திருப்பூர், ஜூன் 25

திருப்பூர் மாநகர போலீஸ் கமிஷனர் ராஜேந்திரன் இடம் மாற்றம் செய்யப்பட்டார், அவருக்கு பதில் மறைந்த அமைச்சர் கக்கனின் பேத்தி யான ராஜேஸ்வரி நியமனம் செய்யப்பட்டார்.

தமிழகம் முழுவதும் 14 போலீஸ் அதிகாரிகள் இடம் மாற்றம் செய்யப்பட்டனர்.

அவ்வகையில்திருப்பூர்மாநகரபோலீஸ்கமிஷனராக பணியாற்றிய ராஜேந்திரன் மதுரை மாநகருக்கு மாற்றம் செய்யப்பட்டார். இவருக்கு பதில் சென்னை பெண்கள் மற்றும் குழந்தைகள் குற்றத் தடுப்பு பிரிவு ஐஜி ராஜேஸ்வரி திருப்பூர் போலீஸ் கமிஷனராக நியமனம் செய்யப்பட்டார். ராஜேஸ்வரி தமிழகத்தில் நேர்மைக்கும் எளிமைக்கும் இலக்கணமாகஇறுதிவரைவாழ்ந்துமறைந்தஅமைச்சர் கக்கனின் பேத்தி அவர் மாநகர போலீஸ் கமிஷனர் ஆக இருந்த லட்சுமி இடமாற்றம் செய்யப்பட்டு அவருக்கு பதில் தற்போது இடம் மாற்றம் செய்யப்பட்ட ராஜேந்திரன் கமிஷனராக இருந்து வந்தார்.

அவர்வந்த போது முதலே ரோந்து பணிகளில் கவனம் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு இது போன்ற பல விஷயங்களில் முழுமையான கவனம் செலுத்தி அதற்கான முயற்சிகளை செய்தார் குறிப்பாக பணியில் ஒழுங்கீனமாக இருக்கும் போலீசார் மீது தயங்காமல் நடவடிக்கை எடுத்தது குறிப்பிடத்தக்கது..



## கோவை அருகே கோவில்பாளையத்தில் புதிய ரோட்டரி சங்க நிர்வாகிகள் பதவியேற்பு விழா

கோவை, ஜூன் 25

கோவை மாவட்டம் அன்னூர் அருகே கோவில் பளையம் பகுதியில் புதிய ரோட்டரி சங்கம் தொடங்கி புதிய நிர்வாகிகளுக்கு நடப்பு ஆண்டுக்கான பதவியேற்பு விழா பட்டையம் வழங்கி நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக ரோட்டரி மாவட்ட ஆளுநர் பி.தனசேகர் கலந்து கொண்டு நிர்வாகிகளுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்து சிறப்புரை ஆற்றினார். மண்டல ஒருங்கிணைப்பாளர் சிவ சதீஷ்குமார் புதிய நிர்வாகிகளுக்கு உறுதிமொழி வாசித்து ஏற்க வைத்தார். இதில் கோவில்பாளையம் சங்கத்தின் பட்டைய தலைவராக வி.பிரகாஷ், செயலாளர் மதன்குமார், பொருளாளர்

செந்தில்குமார் மற்றும் சார்ஜெண்ட் மனோஜ்குமார் ஆகியோர் பொறுப் பேற்றுக் கொண்டார்கள். இந்நிகழ்ச்சியில் ரோட்டரி கிளப் மாவட்ட நிர்வாகிகள்பொதுச்செயலாளர்சிவபிரகாஷ், ஒருங்கிணைப்பாளர் லோகநாதன், ஆளுநர் செயலாளர் வேலுச்சாமி, சேர்மன் மெம்பர்ஷிப் சுரேந்திரன், உதவியாளர் பிரபு, புதிய சங்க ஆலோசகர் வரதராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தார்கள்.

## தவெகவில் இணைந்த அதிமுக தகவல் தொழில்நுட்ப பிரிவுமுக்கிய நிர்வாகிகள்




நாகர்கோவில், ஜன். 25

அதிமுகதகவல்தொழில்நுட்பபிரிவு நெல்லைமண்டலஇணைச்செயலாளர் K.மலேஷ் மற்றும் குமரி கிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் H.குமரகுரு தலைமையில் அதிமுக கிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவை சேர்ந்த மாநகரம், ஒன்றியத்தை சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் தவெக கிழக்கு மாவட்ட செயலாளர் மாதவன் மற்றும் இணைச் செயலாளர்பிரேம்குமார்முன்னிலையில்தவெகவில்இணைந்துகொண்டனர். இந்த நிகழ்வில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் நிகேஷ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜன் உட்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# திக்குறிச்சி மஹா தேவர் கோயில் பக்க சுவர் பணி: உடனடியாக துவங்க கலெக்டர் உத்தரவு



மார்த்தாண்டம், ஜூன்.25

குமரி மாவட்டத்தில் மஹா சிவால ஓட்ட புனித யாத்திரை நடக்கும் 12 சிவாலயங்களில், 2 வது சிவாலயமான ரிஷப ராசி பரிகார ஸ்தலமான திக்குறிச்சி மஹா தேவர் கோயில் மார்த்தாண்டம் தாமிரபரணி ஆற்றில் கரையில் அமைந்துள்ளது. தாமிரபரணி ஆற்றில் பல ஆண்டுகளாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக கோவில் பக்க சுவரோடு சேர்ந்து இருந்த மண் திட்டு ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் அடித்து செல்லப்பட்டது. இதனால் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக இந்த பகுதியில் பக்தர்கள் சார்பில் பக்க சுவர் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்த நிலையில் கடந்த ஆட்சியில் இந்து அறநிலையத்துறை அமைச்சர் சேகர் பாபு , அமைச்சர் மனோ தங்கராஜ் , மாவட்ட ஆட்சியர் மற்றும் அதிகாரிகள் கோயில் நேரில் ஆய்வு செய்து பக்க சுவர் கட்ட கோயில் நிதியில் இருந்து 84 லட்சம் ரூபாய் பொதுபணிதுறைக்கு ஒதுக்கீடு செய்த ஓராண்டு கடந்து அன்றைய அமைச்சர் மனோ தங்கராஜ் பணிகளை துவங்கி வைத்தார். பின்னர் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் எந்த பணிகளும் மேற்கொள்ளவில்லை.

இந்த நிலையில் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு பக்தர்கள் மற்றும் விஷ்வ இந்து பரிஷத் சார்பில் பல கட்ட போராட்டங்கள் நடத்திய நிலையில், பக்க சுவர் கட்ட கோயில் படிதுறை வழியாக பாதை அமைக்க மண் கொட்டபட்டது. தொடர்ந்துஅந்தபணிகள்நிறுத்தப்பட்டது. இதனால் பக்தர்கள் கோயில் படித்துறை வழியாக புனித நீராட முடியாத சூழ்நிலை ஏற்பட்டு உள்ளது. இது போன்று பல கோயில் ஊர்வலங்கள் இந்த படித்துறையில் வந்து சாமி விக்கிரகங்களுக்கு ஆறாட்டு நடைபெற்று வந்தது. தற்போது இந்த ஆஜார ரீதியாக நிகழ்வுகளும் தடைபட்டு உள்ளதோடு பக்க சுவர் கட்டாததால் கோயில் காம்போடு சுவர் எப்போது வேண்டுமானாலும் இடிந்து விழும் நிலையில் அந்தரத்தில் தொங்குகிறது.

இந்த நிலையில் மாவட்ட ஆட்சியர் பிரதாப் நேற்று திக்குறிச்சி மஹா தேவர் ஆலயத்தில் நேரில் ஆய்வு மேற்கொண்டார். அப்போது ஜீலை 15 தேதிக்குள் பணிகள் துவங்க வேண்டும் என்று பொதுப்பணித் துறை அதிகாரிகளுக்கும் கனிமவள துறை அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டார்.

## அபிராமம்

# குடமுருட்டி ஸ்ரீமத் சாமிகளின் ஐய்யப்பன் ஆலயத்தில் கும்பாபிஷேகம்

அபிராமம், ஜூன் 25

ராமநாதபுரம்மாவட்டம்அபிராமம்குடமுருட்டிஶ்ரீமத் சுவாமிகளின் ஐயப்பன் ஆலயத்தில் கும்பாபிஷேக விழா நடைபெற்றது. விழாவிற்கு தக்கார் சண்முகசுந்தரம் தலைமை வகித்து அனைவரையும் வரவேற்றார். பூசாரி ராஜம் ராமகிருஷ்ணன் தலைமையில் வேதமந்திரங்கள் முழங்க கும்ப நீர் ஐயப்பன் ஆலயத்தில் ஊற்றப்பட்டன் ஆயிரக்கணக்காண பொதுமக்கள் கலந்து கொண்டு கும்பநீர் விழும் படிநின்று பெற்றனர். பக்தர்கள் அனைவருக்கும்கோவில்நிர்வாகம்சார்பில்அண்ணதானம் வழங்கப்பட்டன விழாவில் ராம்கோ மேலாளர் வாசு முருகன் உள்பட திறனான பொது மக்கள் கலந்து கொண்டனர்.



# காவிரி ஆற்றில் வரும் நீர் தண்ணீர் பச்சை நிறமாக மாறி இருப்பதால், ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்ட குடிநீர் சுத்திகரிப்பு 50 சதவீதம் பாதிப்பு

## தருமபுரி மாவட்ட மக்கள்தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த ஆட்சியர் அறிவுறுத்தல்.

தருமபுரி ஜூன் 25

தருமபுரி மாவட்டம் காவிரி ஆற்றில் கடந்த சில நாட்களாக வரும் தண்ணீரில் கர்நாடக மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகளின் கழிவுகள் கலக்கப்படுவதால் தண்ணீர் பச்சை நிறத்தில் மாறியுள்ளது என புகார் எழுந்துள்ளது. இதில் அதிகப்படியான பாஸ்பேட் படிந்து இருப்பதால், தண்ணீரில் பாசி அதிகமாக பிடிக்கிறது. இந்த நிலையில் ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்திற்காக தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு தண்ணீர் சுத்திகரிக்கப்படும் பணி 50 சதவீதம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் குடிநீரின் அளவு தற்காலிகமாக குறைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது. இதனால் பொதுமக்கள் குடிநீரை அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டும் பயன்படுத்தி, சிக்கனமாக கையாளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், குடிநீரை நன்கு கொதிக்க வைத்து ஆறவைத்தே பயன்படுத்துமாறும், வீட்டு நீர் தொட்டிகளை சுத்தமாக பராமரிக்குமாறும் மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது. குடிநீரின் நிறம், மணம் அல்லது சுவையில் ஏதேனும் மாற்றம் தென்பட்டால் உடனடியாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு தகவல் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.இயல்பு நிலை திரும்பும் வரை மாவட்ட நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தருமபுரி மாவட்ட ஆட்சியர் வே.சரவணன் தெரிவித்துள்ளார்.



## தஞ்சாவூர் மாநகராட்சி பகுதிகளில்

# துணை மேயர் ஆய்வு செய்து குறைகளை கேட்டார்

தஞ்சாவூர் ஜூன் 25

தஞ்சாவூர் மாநகராட்சி 17வது வட்ட பகுதிகளில் மக்களின் குறைகளை கேட்டு அறிந்து அந்த பகுதியில் ஆய்வு மேற்கொண்டார்

அந்தபகுதிகளில் மக்களின் குறைகளையும் கேட்டறிந்து, உடனடியாக கோரிக்கைகளை நிறைவேற்றி தருவதாக கூறினார் ..

உடன் 17வது வட்ட மாமன்ற உறுப்பினர், கோட்டைப் பகுதி கழகச் செயலாளர் சந்திரசேகர மேத்தா, 17வது வட்ட கழக நிர்வாகிகள்,,கழக உறுப்பினர்கள், மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள். உடன் இருந்தனர்



## தருமபுரி மாவட்டத்தில்

# 12 ம் வகுப்பு முடித்த பெற்றோரை இழந்த மாணவர்கள் உயர்கல்வியில் சேர நடவடிக்கை ஆட்சியர் தகவல்

தருமபுரி ஜூன் 25

தருமபுரி மாவட்டத்தில் 12 ம் வகுப்பு முடித்த பெற்றோர்களை இழந்த மாணவர்களுக்கு உயர்கல்விக்கு வழிகாட்டுதல் நிகழ்ச்சி தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் சரவணன் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் ஆட்சியர் கூறியதாவது.

பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் சிறந்த முறையில் 12 ம் வகுப்பு வரைகல்வி பயின்றுள்ள மாணவர்களை மனதார வாழ்த்துகிறேன். அவர்கள் உயர்கல்வி பெறுவதற்கான அனைத்து வழிகாட்டுதல்களும், உதவிகளையும் மாவட்ட நிர்வாகம் மேற்கொள்ளும் மனம் தளராமல் உயர்கல்வியில் சேர்ந்து அனைவரும் வாழ்க்கை தரத்தில் மேம்பட வேண்டும் . மாவட்டத்தில் 2025 2026 ஆம் கல்வி ஆண்டில் 12 ம் வகுப்பு முடித்த மாணவர்கள் உயர்கல்வியில் சேர்வதை ஊக்குவிக்கும் வகையில் உயர்கல்வி சேர்க்கை வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை மையம் ஆட்சியர் அலுவலகவளாகத்தில் செயல்பட்டு வருகிறது. 12 ம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற, தேர்ச்சி பெறாத மற்றும் பள்ளியின் இடை நின்ற மாணவர்கள் அனைவரும் இந்த ஆலோசனை மையத்தின் சேவைகளை பயன்படுத்திக் கொள்ளலாம். குறிப்பாக பெற்றோரை இழந்த குழந்தைகள் மற்றும் மாற்றுத்திறனாளி மாணவர்கள், ஒற்றைப் பெற்றோர் குழந்தைகள், பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்கள், குறைந்த மதிப்பெண் பெற்ற மாணவர்கள், இலங்கை அகதிகள், பழங்குடியினர், ஆதி திராவிடர் மற்றும் பிற நலிவுற்ற மாணவர்கள் உயர்கல்வியில் சேர்வதற்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. மேலும் உயர்கல்வி சேர்க்கைக்கு தேவையான சான்றிதழ் பெறுவது தொடர்பாகவும், கல்வி கடன் பெறுவது தொடர்பாகவும் மாணவர்கள் மற்றும் பெற்றோருக்கு வழிகாட்டுதல் வழங்கப்படும். 12 ம் வகுப்பில் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு ஐ டி ஐ , பாலிடெக்னிக் மற்றும் திறன் பயிற்சி போன்ற படிப்புகளில் சேர்வதற்கான உரிய ஆலோசனைகள் வழங்கப்படும் இவ்வாறு ஆட்சியர் கூறினார். இந்த கூட்டத்தில் ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கவிதா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஜோதி சந்திரா, ஊராட்சிகள் உதவி இயக்குனர் முத்தமிழ் செல்வன் உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



## மாத்தூர் தொட்டிப்பாலம் அருகே

# நீதிமன்ற உத்தரவை மீறி வழிபாட்டு கூடம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இந்து முன்னணி உள்ளிருப்பு

மார்த்தாண்டம், ஜூன் 25

மாத்தூர் பகுதியில் ஆசியாவில் மிக உயரமான காமராஜரால் கட்டப்பட பிரபல சுற்றுலாத் தலமான மாத்தூர் தொட்டி பாலம் அருகே கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு அனுமதியின்றி கிறிஸ்தவ வழிபாடு கூடம் செயல்பட துவங்கியது. அந்த நேரத்தில் இந்து இயக்கங்கள் சார்பில் 2021 ஆம் ஆண்டு மதுரை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அப்போது அங்கு கிறிஸ்தவ வழிபாடு கூடம் செயல்படவில்லை எனவும் அலுவலகம் செயல்பட்டு வருவதாக நீதிமன்றத்தில் எதிர் தரப்பினர் பதில் தகவல் தாக்கல் செய்யப்பட்டது. அப்போது அங்கு கிறிஸ்தவ வழிபாடு கூடம் செயல்பட கூடாது அப்படி செயல்பட்டால் அந்தகட்டிடத்தை இடிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று அங்கு கிறிஸ்தவ மத பிரச்சாரம் மற்றும் போதனைகள் நடைபெற்றுள்ளது. இதை கண்டித்தும் இந்த கட்டிடத்தை இடிக்க பல முறை போராட்டங்கள் நடத்தியும் விதிமுறைகளை மீறி நீதிமன்ற உத்தரவை மதிக்காத கிறிஸ்தவ வழிபாடு கூட கட்டிடத்தை இடிக்க நடவடிக்கை எடுக்காத அதிகாரிகளை கண்டித்து திருவட்டாறு வட்டாட்சியர்அலுவலகத்தில்இந்துமுன்னணி நிர்வாகிகள் உள்ளிருப்பு போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்து முன்னணி மாவட்ட தலைவர் ஆறுமுகம் தலைமையில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கப்படும் வரை போராட்டத்தை தொடர போவதாக அறிவித்துள்ளனர்.

## தந்தையர் தினத்தை முன்னிட்டு

# இந்தியா ஃபர்ஸ்ட் லைஃப் இன்சூரன்ஸ் கொண்டாடும் நிகழ்ச்சி

சென்னை, ஜூன் 25

இந்தியா ஃபர்ஸ்ட் லைஃப் இன்சூரன்ஸ் நிறுவனம், தந்தையர்தினத்தை முன்னிட்டு "அப்பாவுக்காக ஒரு மாலைப் பொழுது" என்று பொருளில் "ஏக் ஷாம் பாப்பா கே நாம்" என்ற ஒரு உணர்வுபூர்வமான பரப்புரை திட்டத்தை தொடங்கியுள்ளது. தந்தையை குடும்பத்தின் பொறுப்புகளை அக்கறையுடன் பூர்த்தி செய்யும் நபராக மட்டும் பார்க்காமல், அவரை ஒரு தனிப்பட்ட நபராக புரிந்து . கொள்ள முயற்சி செய்யுமாறு குழந்தைகளையும், பிள்ளைகளையும் இந்த விளம்பரப்படம் கேட்டுக்கொள்கிறது.

தி வொம்ப் நிறுவனத்தின் கருத்தாக்கத்தில் உருவான இந்த விளம்பர திரைப்படத்தை, குட் மார்னிங் ஃபிலிம்ஸ் தயாரித்துள்ளது. ஷுஜாத் சௌதாகர் இயக்கியுள்ள இந்த குறும்படத்தில் அவினாஷ் திவாரி நடித்துள்ளார்.

தலைமுறைகளாக, தந்தையர்கள் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவதன் வழியாகவே தங்களது அன்பை வெளிப்படுத்தி வந்திருக்கின்றனர். குடும்பத்திற்காக உழைப்பதிலும், அவர்களை பாதுகாப்பதிலும் அவர்கள் காட்டும் அக்கறையில், அவர்களின் சொந்த கனவுகள், விருப்பங்கள் மற்றும் உணர்வுகள் .பெரும்பாலும் குடும்ப உறுப்பினர்களால் கவனிக்கப்படாமலேயே போய்விடுகின்றன. தந்தைக்கும் பிள்ளைகளுக்கும் இடையே இருக்கும் இந்த இடைவெளியை குறைப்பதும், மற்றும் பிள்ளைகளின் தேவைகளை பூர்த்தி செய்ய பல தியாகங்களையும், முயற்சிகளையும் செய்கிற தந்தையின் மறுபக்கத்தை பிள்ளைகளும், குழந்தைகளும் உண்மையிலேயே அறியுமாறு செய்வதே இந்த பரப்புரை திட்டத்தின் நோக்கமாகும்.

வொம்ப் நிறுவனத்தின் முதுநிலை கிரியேட்டிவ் பார்ட்னர் குஞ்சன் கபா கூறுகையில், "தந்தையர் தினத்தில் பல நிறுவனங்கள் தந்தையர்களைப் புகழ்ந்து பாராட்டுகின்றன. ஆனால் அந்த செய்திகளுள் பலவும் பெரும்பாலும் கவனிக்கப்படாமல் போய்விடுகின்றன. குடும்பத்திற்காக உழைத்து வருவாய் ஈட்டும் நபர்களுக்காக செயல்படும் ஒரு நிறுவனமாக, நாங்கள் ஒரு எளிய உண்மையை உணர்ந்தோம். நம் தந்தையை, அப்பாவாக மட்டுமே நாம் பார்க்கிறோம். பெரும்பாலும் அவர் தான் முதலில் வீட்டிலிருந்து பணிக்காக வெளியே செல்பவராகவும், கடைசியாக வீட்டிற்கு திரும்புபவராகவும் இருக்கிறார். தன் அன்புக்குரியவர்களுக்காக தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணிக்கும் அவர், ஒரு மனிதராக அவர் அன்பு செய்யும் அதே நபர்களாலேயே அறியப்படாத நபராகவே இருந்து விடுகிறார். வருத்தத்தை வெளிப்படுத்தும் ஒரு கதையின் மூலம் சொல்ல நாங்கள் முடிவு செய்தோம். ஒரு மனிதரின் வருத்தம், பலருக்கு ஒரு நினைவூட்டலாக இருக்கக்கூடும் என்பதே இதற்கு காரணம். காலம் கடந்து விடுவதற்கு முன்பே தந்தையை புரிந்துகொள்ளுங்கள்" என்றார்.




# மேல்புறம் ஒன்றிய பி. எம். எஸ் அலுவலகம் திறப்பு

களியக்காவிளை, ஜூன்.25

மேல்புறம் ஒன்றிய பி எம் எஸ் அலுவலக திறப்பு விழா குழுத்துறை சந்திப்பில் நடைபெற்றது . புதிய அலுவலகத்தை பாரத மாதா சேவா டிறஸ்ட் தலைவர் சுகுமாரன்ஜி திறந்து வைத்தார். ஒன்றிய செயற்குழு உறுப்பினர் ரங்க பாய் திருவிளக்கு ஏற்றி வைத்தார். பி. எம். எஸ். மாநில தலைவர் வெங்கட்ராகவன் தலைமை வகித்தார். மாநில பொதுச் செயலாளர் சங்கர் அலுவலக பெயர் பலகை திறந்து வைத்தார். அரங்கு சாமி சங்க பெயர் பலகை திறந்து வைத்தார். பி. எம்.எஸ்.சின் மாவட்ட தலைவர் மணிகண்டன் அம்பேத்கர் படத்தை திறந்து வைத்தார்.

தொடர்ந்து நடந்த வாழ்த்தரங்கத்தில் ஒன்றிய தலைவர் செல்வராஜ் தலைமை வகித்தார்.ஒன்றிய பொதுச்செயலாளர் மணிகண்டன் வரவேற்றார். பி. எம். எஸ் அகில பாரத தலைவர் மல்லேசம் ஜி பேசினார்.வெள்ளிமலை விவேகானந்த ஆஸ்ரம சுவாமி சைதன்யானந்தஜி மகராஜ், ஆசியுரை வழங்கினார். பி. எம். எஸ். ன் அகில பாரத பொறுப்பாளர் துரைராஜ், பி. எம். எஸ் தென்பாரத அமைப்பு செயலாளர் ராஜீவன் உள்ளிட்டோர் பேசினர். இந்த நிகழ்ச்சியில் சங்க நிர்வாகிகள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் பாரத மாதா டிரஸ்டு தலைவர் முருகேசன் நன்றி கூறினார்.



## பள்ளியைத் தேடி தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் அரசு பொது தேர்வில்

# 10,12 வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற 42 மாணவர் மாணவிகளுக்கும், 100 சதவீத தேர்ச்சி பெற்ற பள்ளிக்கும் பாராட்டு

தஞ்சாவூர் ஜூன் 25

தஞ்சாவூர் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மன்னார்குடி சட்டமன்ற தொகுதியில் (2025-2026)ஆம் கல்வி ஆண்டில் அரசு பொதுத் தேர்வில் 10 மற்றும்12ஆம்வகுப்பில்அதிகமதிப்பெண் பெற்ற அரசுப் பள்ளி, அரசு உதவி பெறும் பள்ளி மற்றும் தனியார் பள்ளிகளைச் சார்ந்த 42 மாணவ மாணவிகளுக்கும் மற்றும் 100 சதவீதம்தேர்ச்சியை வழங்கிய 15 அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கு தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ச.முரசொலி பாராட்டு விழா நடத்தி வாழ்த்து தெரிவித்தார்.

இந்நிகழ்வில் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் ராஜமாணிக்கம், தலைமை செயற்குழு உறுப்பினர் தலையாமங்கலம் பாலு, ஒன்றிய கழக செயலாளர்கள் முத்துவேல், சித்தேரி சிவா,.கவியரசு, நகர செயலாளர் .வீரா கணேசன், நகர்மன்ற தலைவர் சோழராஜன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் .சோபா கணேசன், மீனாட்சி சூர்யபிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## நாகர்கோவிலில்
# ஹெல்மெட் சோதனையில் போலீசாருடன் வாக்குவாதம் செய்த மாஜி போலீஸ்காரர்; பைக் பறிமுதல்



நாகர்கோவில், ஜூன்.24

ஆசாரிப்பள்ளம் காவல் நிலையம் அருகே போலீசார் நேற்று வாகன சோதனையில் இருந்தனர். அப்போது அந்த வழியாகஹெல்மெட்அணியாமல்பைக்கில்வந்தவர்களை தடுத்து நிறுத்தி அபராதம் விதித்தனர்.

பள்ளி கல்லூரிகளுக்கு செல்பவர்கள், அரசு மற்றும் தனியார்நிறுவனங்களுக்குப்பணிக்கு செல்பவர்கள், அவசர வேலைக்காக பணியிடங்களுக்கு செல்பவர்கள் என ஹெல்மெட் அணியாமல் பைக்கில் பலரும் போலீஸ் சோதனையில் சிக்கி அபராதம் கட்டினர்.

இந்நிலையில்அந்தவழியாகஹெல்மெட்அணியாமல் பைக்கில் வந்த ஒருவரையும் போலீசார் மடக்கினர். அவருக்கு அபராதம் விதிக்க அவர்கள் பைக் எண்ணை போட்டோ எடுத்தனர். அப்போது அவர் போலீசாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். நான் யார் தெரியுமா? என்று கேட்டு வாக்குவாதம் செய்தார். இந்த சத்தம் கேட்டு அருகில் உள்ள காவல் நிலையத்திலிருந்து மற்ற போலீசார் வந்தனர்.

\பின்னர் சம்பந்தப்பட்ட நபரின் பைக்கை பறிமுதல் செய்து காவல் நிலையம் கொண்டு சென்றனர். அதன் பின்னர் அந்த நபர் ஓய்வு பெற்ற போலீஸ்காரர் என்று தெரியவந்தது. அவரிடம் இது தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தினர். இந்த சம்பவத்தால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

## ஆரல்வாய்மொழி அருகே
# ரயிலில் பெண்ணிடம் செல்போன் திருடிய வாலிபர் கைது

நாகர்கோவில், ஜூன். 25

ஆரல்வாய்மொழி தெற்கு தெருவை சேர்ந்தவர் ரீனா (45) இவர் நேற்று முன்தினம் இரவு கோவையிலிருந்து நாகர்கோவில்வரும்எக்ஸ்பிரஸ்ரயிலில்ஆரல்வாய்மொழி வந்து கொண்டிருந்தார். முன்பதிவு பெட்டியல் இவர் பயணித்தார். அதிகாலையில் ரயில் ஆரல்வாய்மொழி அருகே சென்னுவதற்காக நின்று கொண்டிருந்தது. அப்போது ரீனா தனது பேக் மற்றும் உடைமைகளை எடுத்துக் கொண்டு ஆரல்வாய்மொழி ரயில் நிலையத்தில் இறங்க தயாராகிக் கொண்டிருந்தார்.

அந்த நேரத்தில் அந்த பெட்டியில் நடமாடிய வாலிபர் ஒருவர் திடீரென ரீனாவின் ஹேண்ட் பேக்கிலிருந்த செல்போனை பறித்து விட்டு தப்பி ஓடினார். லடனடி ரீனா கூச்சல் இட்டார். அந்த வாலிபர் ரயில் பெட்டியில் இருந்து கீழே குதிக்க முயன்றார். ஆனால் பயணிகள் அவரை சுற்றி வளைத்துப் பிடித்தனர். பின்னர் ரயில் ஆரல்வாய்மொழி வந்ததும் ரயில்வே போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

நாகர்கோவிலில் இருந்து ரயில்வே போலீசார் சென்று சம்பந்தப்பட்ட வாலிபரை காவல் நிலையம் அழைத்து வந்து விசாரித்தனர். விசாரணையில் அவர் குழித்துறை அருகே உள்ள கழுவன்திட்டை பகுதியைச் சேர்ந்த பிரஜித் (35) என்பது தெரியவந்தது. விசாரணைக்கு பின் அவரை போலீசார் கைது செய்து நாகர்கோவில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். கைதான பிரஜீப் மீது வேறு வழக்குகள் உள்ளதா? என்பது குறித்து விசாரணை நடந்து வருகிறது.

## ஈரோடு மாவட்டத்தில்
# 1 1/5 லட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து
## 28 ந் தேதி வழங்கப்படுகிறது



ஈரோடு ஜூன் 25

வருகிற 28ம் தேதி 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம் ஈரோடு மாவட்டத்தில் நடைபெற உள்ளது.

அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார மையங்கள், மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, பள்ளிக்கூடங்கள், அங்கன்வாடி மையங்கள், சத்திரங்கள் மற்றும்தேசியநெடுஞ்சாலைகளில்உள்ளசுங்கச்சாவடிகள் ஆகிய இடங்களில் முகாம்கள் நடைபெற உள்ளது. எனவே பெற்றோர்கள் தங்களின் 5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் ஏற்கனவே எத்தனை முறை போலியோ சொட்டு மருந்து கொடுத்திருந்தாலும் அருகிலுள்ளமுகாம்களுக்குஅழைத்துசென்றுபோலியோ சொட்டு மருந்து கொடுத்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார். இதுத 29ம் தேதி முதல் ஜூலை 4ம் தேதி வரை வீடு வீடாக சென்றுபார்வையிடப்பட்டுவிடுபட்டவயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குபோலியோசொட்டுமருந்துவழங்கப்பட உள்ளது. இத்தகவலை ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தெரிவித்துள்ளார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் முன்னாள் படைவீரர் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. அப்போது முன்னாள் படைவீரர் வாரிசுதாரர்களுக்கு கல்வி உதவித்தொகையினை மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி வழங்கினார்.

## பல்சமய நட்புறவுக் கழகத்தின் திருப்பூர் ஒன்றிய கிளை சார்பாக
# தமிழக முதல்வர் சி.ஜோசப் விஜய் 52 ஆவது பிறந்தநாள் விழா




திருப்பூர் ஜூன்:25

திருப்பூர்முதலிபாளையம் ஹவுசிங் யூனிட் மெயின் ரோட்டில் பல்சமய நட்புறவுக் கழகத்தின் திருப்பூர் ஒன்றிய கிளை சார்பாக ஒன்றியக் கிளையைச் செயலாளர் சதீஷ்குமார் தலைமையில் சி.ஜோசப் விஜய் அவர்களுடைய பிறந்தநாள் விழாகொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் தமிழக வெற்றிக் கழகத்தின் தெற்கு ஒன்றிய செயலாளர் தேவராஜ் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டார்.

விழாவில் தலைவர் ஷாஜகான் மாவட்ட பொறுப்பாளர் அக்கீம் மாவட்ட இளைஞரணி தலைவர் உசேன் மாவட்ட பொருளாளர் செல்வகுமார் தவெக.திருப்பூர் தெற்குஒன்றியதுணை செயலாளர் சிவக்குமார் தெற்கு ஒன்றிய துணை செயலாளர் ஒன்றியதலைவர் சந்திரன் திருப்பூர் ஒன்றிய பொருளாளர் சுஜித் ஒன்றிய துணைச் செயலாளர் பழனிச்சாமி திருப்பூர் மாவட்ட மகளிர் அணி தலைவி மேகலா திருப்பூர் மாவட்ட மகளிர் அணி செயலாளர் சித்ரா தெற்கு ஒன்றிய துணைச் செயலாளர் பழனிச்சாமி ஒன்றிய செயற்குழு உறுப்பினர்ராமகிருஷ்ணன்ஒன்றியபொதுக்குழு உறுப்பினர் மனோகர் மற்றும் தவெக. நிர்வாகிகளுபல்சமய நட்புறவு கழக நிர்வாகிகளும் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்..

# சோ. பாலகிருஷ்ணன் 20வது நினைவு நாள் அனுசரிப்பு



முதுகுளத்தூர் ஜுன்25

ராமநாதபுரம்மாவட்டம்முதுகுளத்தூர் தாலுகாஅருகேவெண்ணீர்வைக்காலில் சோனை மீனாள் கல்லூரி வளாகத்தில் முன்னாள் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சோ. பாலகிருஷ்ணன் அவர்களின் 20 வது நினைவு நாள் அனுசரிக்கப் பட்டது. தமிழக வெற்றி கழகத்தினர் அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் கட்சி நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

# குமரி ஆட்சியர் அலுவலகத்தில் பொதுமக்களுக்கு கட்டுப்பாடு விஐபிகளுக்கு முன்னுரிமையா?
## சமூக ஆர்வலர்கள் குற்றச்சாட்டு

நாகர்கோவில், ஜூன்.25

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து கோரிக்கை மற்றும் புகார் மனுக்களை அளிப்பதற்காக தினமும் ஏராளமான பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வருகை தருகின்றனர். வழக்கமாக பிற்பகல் 3 மணி முதல் 3.30 மணி வரை பொதுமக்கள் ஆட்சியரை சந்தித்து மனுக்களை வழங்கும் நடைமுறை இருந்து வருகிறது.

இந்த நிலையில், தற்போது ஆட்சியரை சந்திப்பதற்காக பொதுமக்கள் தரப்பில் இரண்டு பேருக்கு மேல் அனுமதி வழங்கப்படவில்லை என்றும், அதே நேரத்தில் விஐபிகள் மற்றும் அதிகாரிகளுக்கு நெருக்கமான நபர்கள் எத்தனை பேர் வந்தாலும் அனுமதிக்கப்படுவதாகவும் சமூக ஆர்வலர்கள் குற்றம்சாட்டி யுள்ளனர்.

மேலும், மாவட்ட ஆட்சியரின் உதவியாளர், தபேதார் மற்றும் பாதுகாப்பு பணியில் உள்ள காவலர்கள் சிலருக்கு முன்னுரிமை வழங்குவதாகவும், இதனால் தொலைதூர பகுதிகளில் இருந்து பல மணி நேரம் காத்திருக்கும் பொதுமக்கள் ஆட்சியரை நேரில் சந்திக்க முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லும் நிலை உருவாகியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்கள் மற்றும் விஐபிகளுக்கு ஒரே விதமான நடைமுறையை பின்பற்ற வேண்டும் என்றும், மனு அளிக்க வரும் அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்க மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## திக்கணங்கோடு பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் :
# பேருந்து நிறுத்தங்களை இடமாற்றி ஆக்கிரமிப்புகளை அகற்றி நடவடிக்கை எடுக்க ஆட்சியருக்கு மனு

நாகர்கோவில் ஜூன் 25

குமரி மாவட்டம் திக்கணங்கோடு பகுதியை சேர்ந்த சமூக ஆர்வலர் அப்பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு காணவும், ஆக்கிரமிப்புகளைஅகற்றி சாலையை விரிவாக்கம் செய்திடவும் பொது நலன் கருதி மாவட்ட ஆட்சியர் மற்றும் நெடுஞ்சாலை துறையினருக்கு மனு அனுப்பி நடவடிக்கை எடுக்க கோரி உள்ளார். அவர் அனுப்பிய கோரிக்கை மனுவில் கூறப்பட்டுள்ளதாவது : கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட முக்கியப் பகுதியாக திக்கணங்கோடு விளங்கி வருகிறது. இப்பகுதி பத்மநாபபுரம் மற்றும் கிள்ளியூர் ஆகிய இரண்டு சட்டமன்றத் தொகுதிகளின் எல்லையாகவும், மக்கள் அதிகம் கூடும் முதன்மைச் சந்தைப் பகுதியாகவும் அமைந்துள்ளது.

திக்கணங்கோடு சந்திப்பானது, நாற்புறமும் முக்கிய நகரங்களை இணைக்கும் மையப் புள்ளியாக உள்ளது. இங்கிருந்து குளச்சல் 5.4 கி.மீ, கருங்கல் 4.2 கி.மீ, திங்கள்நகர் 4.7 கி.மீ மற்றும் தக்கலை 7.5 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளன. இந்த புவியியல் அமைப்பின் காரணமாக, திக்கணங்கோடு சந்திப்பில் நாள்தோறும் ஆயிரக்கணக்கான பொதுமக்களும், நூற்றுக்கணக்கான பேருந்து உள்ளிட்ட வாகனங்களும் கடந்து செல்கின்றன.

தற்போதைய முக்கியப் பிரச்சினைகள்: இப்பகுதியில் தினசரி காலை மற்றும் மாலை வேளைகளில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதனால் பள்ளி, கல்லூரி செல்லும் மாணவமாணவியர் மற்றும் வேலைக்குச் செல்வோர் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். மிக முக்கியமாக, அவசரச் சிகிச்சைக்காகச் செல்லும் ஆம்புலன்ஸ் வாகனங்கள் கூட இந்த நெரிசலில் சிக்கித் தவிக்கும் அவல நிலை நீடிக்கிறது. மேலும், இப்பகுதியில் உள்ள திருமண மண்டபங்களில் விசேஷங்கள் நடைபெறும் நாட்களில், சுமார் 1 கி.மீ தூரத்திற்கு வாகனங்கள் அணிவகுத்து நிற்பது தொடர்கதையாகி உள்ளது.

எனவே, திக்கணங்கோடு சந்திப்பில் நிலவும் இந்த மிக முக்கியமான போக்குவரத்துப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் பொருட்டு, பின்வரும் கோரிக்கைகளைத் தங்களின் கனிவான கவனத்திற்குச் சமர்ப்பிக்கிறோம்:

கருங்கல் மார்க்கப் பேருந்து நிறுத்தம் மாற்றம்: திக்கணங்கோடு சந்திப்பில் உள்ள கருங்கல் மார்க்கமாகச் செல்லும் பேருந்து நிறுத்தத்தை, தற்போதைய இடத்திலிருந்து சுமார் 50 முதல் 100 மீட்டர் தொலைவிற்கு நகர்த்தி, புதிதாகக் கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தின் மேல் பேருந்துகள் நின்று பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குளச்சல் மார்க்கப் பேருந்து நிறுத்தம் மாற்றம்: அதேபோல், குளச்சல் மார்க்கமாகச் செல்லும் பேருந்து நிறுத்தத்தையும் சுமார் 25 முதல் 40 மீட்டர் தூரம் மாற்றி அமைத்து, பாலத்திற்கு அருகே கொண்டு செல்ல வேண்டும்.

சாலை ஆக்கிரமிப்புகள் அகற்றுதல்: திக்கணங்கோடு சந்திப்புச் சாலையின் நாற்புறமும் உள்ள சில வியாபாரிகள், நெடுஞ்சாலைப் பகுதியை ஆக்கிரமித்துக் கடைகளை அமைத்துள்ளனர். எனவே, நெடுஞ்சாலைத் துறை சார்பாகச் சந்திப்பிலிருந்து நான்கு திசைகளிலும் செல்லும் சாலைகளில், சுமார் 100 முதல் 300 மீட்டர் தூரம் வரை உள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளையும் உடனடியாக அகற்ற வேண்டும். சென்டர் மீடியன் (Center Median) அமைத்தல்: சாலை ஆக்கிரமிப்புகள் முழுமையாக அகற்றப்பட்ட பிறகு, சந்திப்பிலிருந்து நான்கு மார்க்கங்களிலும் சுமார் 100 முதல் 300 மீட்டர்நீளத்திற்குச்சாலையின்நடுவே 'சென்டர் மீடியன்' (Center Median தடுப்புச் சுவர்) அமைத்துத் தர வேண்டும்.

சாலையில் தற்போது உள்ள ஆக்கரமிப்புகளை அகற்ற வியாபாரிகள் ஒத்துழைக்காத பட்சத்தில் போக்குவரத்து நெரிசலை தீர்க்கும் பொருட்டு திக்கணங்கோட்டில் புதிதாக மேம்பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேற்கண்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டால், திக்கணங்கோடு சந்திப்பில் போக்குவரத்து நெரிசல் முற்றிலும் குறைந்து, பொதுமக்களின் பாதுகாப்பான பயணத்திற்கு வழிவகுக்கும். எனவே, மாவட்ட நிர்வாகமும் நெடுஞ்சாலைத் துறையும் இக்கோரிக்கைகளை உடனே பரிசீலித்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது

# கேரளாவை போன்று தமிழகத்திலும் அரசே ரப்பர் விலை நிர்ணயம் செய்ய வேண்டும்
## பி.எம்.எஸ் அகில இந்திய பொறுப்பாளர் பேட்டி



மார்த்தாண்டம், ஜூன்.25

குழித்துறையில் மேல்புறம் ஒன்றிய பி.எம்.எஸ் அலுவலகம் திறப்பு விழா நடைபெற்றது கட்டிடத்தை பாரத் மாதா சேவா டிரஸ்ட் தலைவர் சுகுமாரன் ஜி திறந்து வைத்தார்.

தொடர்ந்து குத்து குத்து விளக்கு ஏற்றி, பி.எம்.எஸ் கொடியை மாநில தலைவர் வெங்கட் ராகவன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து அம்பேத்கர், குருஜி ,பாரத் மாதாஉட்பட்ட படங்கள்திறக்கப்பட்டது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பி.எம்.எஸ் அகில பாரத பொறுப்பாளர் துரைராஜ் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது :

அகில இந்திய அளவில் 4 கோடிக்கும் அதிகமான தொழிலாளிகளை கொண்ட சங்கம் பி.எம்.எஸ். உலக அளவில் உள்ள தொழிலாளர்களுக்கு உதவ கூடிய சங்கம். வருகின்ற 13,14,15,16 தேதிகளில் ஹைதராபாத் பிரிக்ஸ் அமைப்பில் பி.எம். எஸ் சார்பில் மிக பெரிய மாநாடு நடக்க உள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் பெரிய அளவில் தொழிற்சாலைகள் இல்லாத நிலையில் இருக்கின்றன. சில தொழிற்சாலைகள் மூடப்பட்டு இருக்கிறது. அந்த தொழிற் சாலைகளை மீண்டும் திறக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அமைப்பு சார தொழிலாளர் அதிக அளவில் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருகின்றனர். இவர்கள் வாழ்வாதாரம் உயரஎல்லாசெயல்களையும்செயல்படுத்த வேண்டும்.

ரப்பர்தோட்டதொழிலாளர்கள்,முந்திரி ஆலை தொழிலாளர்கள் வேலை இழந்து பெரிய அளவில் பாதிக்கப்பட்டு இருகின்றனர். ஆகவே உடனே ரப்பர் தொழில் சாலை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தில் ரப்பர் விலை அரசு நிர்ணயம் செய்யாததால் விவசாயிகள், தொழிலாளிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். கேரளாவில் ரப்பருக்கு கிலோ ரூ. 250 என்று அரசு நிர்ணயம் செய்து உள்ளது. அது வரவேற்கத்தக்கது ஆனாலும் அந்த விலை உயர்தி வழங்க வேண்டும். அது போல தமிழகத்திலும் அரசே ரப்பர் விலை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பேட்டியின் போது அவர் தெரிவித்தார்

# குமரி வழிப்பறி வழக்கில் குற்றவாளிக்கு 3 வருட சிறை: பத்மநாபபுரம் கூடுதல் அமர்வு நீதிமன்றம் தீர்ப்பு




தக்கலை, ஜூன்.25

திருநெல்வேலி மாவட்டம் கருங்குளம்பிடிகாலனியை சேர்ந்த ஐயாத்துரை மகன் ரசூல் என்ற முத்தையா(23). இவர்கடந்த 2022 ஆம் ஆண்டு குலசேகரம் காவல் நிலையத்திற்கு உட்பட்ட செருப்பாலூர் முத்தாரம்மன் திருக்கோவிலின் தலைவரிடம் ஆயுதத்தை காட்டி பணம் பறித்த வழக்கில் இவரும் இவரது சகோதரர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது.இவரதுசகோதரர் இளஞ்சிறார் என்பதால் இளஞ்சிறார் நீதிமன்றத்தில் அவரது வழக்கு நடைபெற்று வருகிறது.

தற்போது 23 வயதாகும் ரசூல் என்ற முத்தையா மீது 2015 ஆம் ஆண்டு முதல் சுமார் 24 க்கு மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் இருந்து வருகிறது. அனைத்து வழக்குகளும் நிலுவையில் உள்ள நிலையில் முதன் முதலாக தற்போது குலசேகரம் காவல் நிலையத்தில் பதியப்பட்ட குற்ற வழக்கில் முதியவரை மிரட்டி ரூ.550 பணம் பறித்த குற்றச்சாட்டில்நேற்றுபத்மநாபபுரம் கூடுதல் அமர்வு நீதிமன்ற நீதிபதி பரமசிவதாஸ் பரபரப்பு தீர்ப்பு வழங்கினார்.

இவர் மீது பல காவல் நிலையங்களில் பல்வேறு குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளதையும்,

இந்த குறுகிய காலத்தில் அதிக குற்றச்சம்பவங்களில் ஈடுபட்டதை கருத்தில் கொண்டு

இவரை வெளியில் விட்டால் சமூகத்திற்கு பெரிய கேடு என்பதை அரசுதரப்பில்ஆஜரானகூடுதல்குற்றவியல் வழக்கறிஞர் எடுத்துரைத்ததை கருத்தில் கொண்டு, நீதிமன்றம் இந்திய தண்டனைச் சட்ட பிரிவு 384 இன் கீழ் ம 3 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கியது டன் 5 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பு அளித்தது .

இந்த வழக்கில் அரசு தரப்பில் கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் ஜெகதேவ் ஆஜராகி வாதாடினார்.



### தூத்துக்குடி வ.உ.சி துறைமுகத்தில்

# 6 புதிய திட்டங்களை மத்திய அமைச்சர் தொடங்கி வைத்தார்

தூத்துக்குடி, ஜூன் 25

தூத்துக்குடி சிதம்பரனார் துறைமுக ஆணையத்தில் 6 புதிய திட்டங்களை மத்திய அமைச்சர் சர்பானந்த சோனோவால் தொடங்கி வைத்தார்.

இந்தியாவின் முன்னணிப் பெரியதுறைமுகங்களில் ஒன்றான தூத்துக்குடி சிதம்பரனார் துறைமுக ஆணையத்தின் கல்வி, நிலைத்தன்மை மற்றும் மின்னணு மாற்றம் தொடர்பான பல்வேறு முக்கிய முயற்சிகளின் அர்ப்பணிப்பு விழா புது டெல்லியில் உள்ள போக்குவரத்து பவனில் நடைபெற்றது. இதில் மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் சர்பானந்த சோனோவால் இத்திட்டங்களைத் தொடங்கி வைத்தார்.

சரக்குக் கையாளுதலைத் தாண்டி, துறைமுகத்தின் நீண்டகால வளர்ச்சி மற்றும் சமூக மேம்பாட்டை இலக்காகக் கொண்டு அர்ப்பணிக்கப்பட்ட 6 திட்டங்களின் விபரங்கள் வருமாறு: கேந்திரிய வித்யாலயா பள்ளி (வித்யா பிரவேஷ்) துறைமுக ஊழியர்கள், மத்திய அரசுப் பணியாளர்கள் மற்றும் உள்ளூர் மக்களின் குழந்தைகளுக்கு சிபிஎஸ்இ (CBSE) பாடத்திட்டத்தின் கீழ் தரமான கல்வி வழங்கும் பொருட்டு, துறைமுக வளாகத்தில் புதிய கேந்திரிய வித்யாலயா பள்ளி தொடங்கப்பட்டு, 202627 கல்வி ஆண்டிற்கான 'வித்யா பிரவேஷ்' நிகழ்வு காணொலி காட்சி மூலம் தொடங்கி வைக்கப்பட்டது.

நிலைத்தன்மை அறிக்கை 2026 மற்றும் சான்றிதழ் "பசுமை கடல்சார் எதிர்காலத்தை நோக்கி" என்ற தலைப்பில் துறைமுகத்தின் முதல் விரிவான நிலைத்தன்மை அறிக்கை வெளியிடப்பட்டது. புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் பயன்பாடு மற்றும் கார்பன் உமிழ்வைக் குறைத்தமைக்காகத் துறைமுகத்திற்குப் புகழ்பெற்ற 'Scope2 கார்பன் வெளியீடு இல்லாத துறைமுகம்' சான்றிதழ் வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. PortGPT மொபைல் செயலி அறிமுகம்: செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் (Generative AI) மூலம் இயங்கும் 'PortGPT' மொபைல் செயலியை அமைச்சர் அறிமுகப்படுத்தினார்.

இந்த வசதியைப் பெறும் இந்தியாவின் முதல் பெரியதுறைமுகம் தூத்துக்குடி என்பது குறிப்பிடத்தக்கது. இது துறைமுகத் தகவல்களை எளிதாக அணுகவும், செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தவும் உதவும். ஐஐஎம் கொல்கத்தா ஆய்வு மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தம், ஐஐஎம் கொல்கத்தா நிறுவனம் தயாரித்த, துறைமுகத்தின் பசுமை ஹைட்ரஜன் மற்றும் சுற்றுச்சூழல் மாற்றங்கள் குறித்த ஆய்வறிக்கை வெளியிடப்பட்டது. மேலும், ஊழியர்களின் திறன் மேம்பாடு மற்றும் கடல்சார் தளவாட ஆராய்ச்சிக்காக வதோதராவில் உள்ள கதிசக்தி விஸ்வவித்யாலயா பல்கலைக்கழகத்துடன் புதிய புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. துறைமுக ஆணையத் தலைவர் சுசாந்த குமார் புரோஹித் பேசுகையில், மத்திய அமைச்சகத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படுத்தப்படும் இத்திட்டங்கள் வர்த்தகம், தொழில்துறை மற்றும் உள்ளூர் மக்களுக்குப் பெரும் பயனளிப்பதோடு, 'விக்ஸித் பாரத் 2047' தேசிய இலக்கை அடையப் பெரிதும் பங்களிக்கும் என்று தெரிவித்தார்.



தூத்துக்குடி தென்பாகம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட லெவிஞ்சிபுரம் பகுதியில் நேற்று சட்டவிரோதமாக மதுபான விற்பனையில் ஈடுபட்ட 2 நபர்களை கைது : தூத்துக்குடி தென்பாகம் காவல் நிலைய ஆய்வாளர் திருமுருகன் வழக்கு பதிவு செய்து சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட பாத்திமா நகரைச் சேர்ந்த லிவிங்ஸ்டன் (எ) வில்லிங்டன் (36) மற்றும் மேல சண்முகபுரம் பகுதியைச் சேர்ந்த மரிய சூசை ராஜ் (36) ஆகியோரை கைது செய்து அவர்களிடமிருந்து 232 மது பாட்டில்கள் மற்றும் 2 இருசக்கர வாகனங்களையும் பறிமுதல் செய்தார்.



### தேசிய அளவில் ஐஸ் ஹாக்கி போட்டி

# களியக்காவிளை பள்ளி மாணவர் 2ம் இடம் கலெக்டர் பாராட்டு

நாகர்கோவில், ஜூன்.25

கன்னியாகுமரி மாவட்ட விளையாட்டு துறையின் சார்பில் தேசிய அளவில் ஐஸ் ஹாக்கி போட்டியில் கலந்துகொண்டு, 2ம் இடம் பெற்ற பள்ளி மாணவனை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் கலெக்டர் அலுவலகத்தில் வைத்து நேரில் சந்தித்து வாழ்த்துக்களை தெரிவித்தார். பின்னர் அவர் கூறியதாவது:

தேசிய ஐஸ் ஹாக்கி சாம்பியன்ஷிப் 2026 போட்டி உத்தரகாண்ட் மாநிலம் டேராடூனில் கடந்த ஜூன் 15 முதல் ஜூன் 18 வரை நடைபெற்றது இப்போட்டி யில் தமிழ்நாடு அணி சார்பில் பங்கேற்ற கன்னியாகுமரி மாவட்ட மாணவர் வெள்ளிப் பதக்கம் வென்று தமிழக த்திற்கும், குமரி மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இந்த ஆண்டு தேசிய ஐஸ் ஹாக்கி சாம்பியன்ஷிப்பில் முதன்முறையாக 15 வயதிற்குட்பட்டோருக்கான பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இப்போட்டியின் தமிழ்நாடு அணியின் சார்பில் கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளை அருகே உள்ள மரியாகிரி புனித மேரிஸ் சிபிஎஸ்இ பள்ளியில் 9ம் வகுப்பு மாணவர் எஸ். ஆஷிக் கலந்துகொண்டு விளையாடினார். விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதி போட்டியில் தமிழ்நாடு அணி 2ம் இடம் பிடித்து வெள்ளிப் பதக்கத்தைக் கைப்ப ற்றியது.

இளம் வயதிலேயே பனிச்சறுக்கு விளையாட்டான ஐஸ் ஹாக்கியில் தேசிய அளவில் சாதனை படைத்த மாணவர் ஆஷிக்குக்கு மனமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த அனைத்து விளையாட்டு வீரர், வீராங்கனைகள் இதுபோன்ற பல்வேறு போட்டிகளில் பங்கேற்று, வெற்றி பெற்று நமது நாட்டிற்கும், மாநிலத்திற்கும் மற்றும் நமது மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். என கலெக்டர் கூறினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட விளையாட்டு அலுவலர் வினு உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

### உத்தமபாளையம் வட்டத்தில்

# பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகள்: கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு



தேனி, ஜூன் 25

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

உத்தமபாளையம் வட்டதிற்குட்பட்ட, காமயகவுண்டன்பட்டியில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் அரசு மாணவர் விடுதியில் அடிப்படை வசதிகள் குறித்தும், உணவின் தரம் குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மாணவர்களின் தேவைகளுக்கு ஏற்ப விடுதியில் அனைத்து வசதிகளும் செய்து தர வேண்டும் எனவும், மாணவர்களுக்கு தரமான உணவு மற்றும் பாதுகாப்பான சூழல் தொடர்ந்து கிடைக்கப்பெறுவதை உறுதி செய்ய வேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, காமயகவுண்டன்பட்டி அரசு தொடக்கப்பள்ளியில் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவின் தரம், சுவை, சுகாதாரம் மற்றும் உணவுப் பொருட்களின் தரம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, மாணவர்களுடன் கலந்துரையாடி, பள்ளியின் வசதிகள் மற்றும் மதிய உணவு குறித்து கேட்டறிந்தார். மேலும், கம்பம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விவசாயிகளின் விளைப்பொருட்கள் சேமித்து வைக்கப்படும் இடங்கள், பராமரிக்கப்படும் பதிவேடுகள் மற்றும் விற்பனைக்கூடத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, விவசாய விளைப்பொருட்கள் விற்பனை செய்யப்படும் முறை, மின்னணு ஏல நடைமுறை மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் சேவைகள் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

பின்னர், உத்தமபாளையம் வட்டம், காமயகவுண்டன்பட்டியில் சங்கிலி கருப்பன் தண்ணீர் பாறை கல் உடைக்கும் மகளிர்நலச்சங்கத்தின் சார்பில் நடத்தப்பட்டு வரும் கல்குவாரியினை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இவ்வாய்வில் உதவி இயக்குநர் (கனிம வளம்) மாரியம்மாள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சுரேஷ்குமார், மேலாளர் (வேளாண் விற்பனைக்குழு, தேனி) சுமதி, மேற்பார்வையாளர் (பொ) (ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், கம்பம்) மணிமேகலை உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



# நாகர்கோவில் அண்ணா விளையாட்டு மைதானம்; ரூ 1.19 கோடியில் சீரமைப்பு

### மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்

நாகர்கோவில், ஜூன்.25

நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட அண்ணா விளையாட்டு மைதானத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் கூறியதாவது:

கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட கடை கோடி கிராமங்களில் உள்ள வீரர் வீராங்கனைகள் அண்ணா விளையாட்டு அரங்கில் பயிற்சி பெற்று, மாவட்ட தேசிய அளவில் சிறந்து விளங்குகிறார்கள். இங்கு தினந்தோறும் வந்து பயிற்சி மேற்கொண்டு செல்கிறார்கள். மைதானத்தில் சிறுவர் சிறுமியர்கள், பெரியவர்களுக்கென நீச்சல் குளம் பயன்பாட்டில் உள்ளது. இச்நீச்சல் குளத்தினை மேலும் சீரமைத்திட மாவட்ட விளையாட்டு அலுவலர் மற்றும் பொதுப்பணித்துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள மகளிர் விளையாட்டு வீரங்கனைகள் விடுதியை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. விடுதியில் உள்ள பழுதுகளை சீரமைத்திட அறிவுறுத்தப்பட்டது. அத்தோடு அவர்களுக்கு தயார் செய்யப்பட்ட உணவின் தரம் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதனைத்தொடர்ந்து பளு தூக்கும் வீரர்கள் அறை, கூடைபந்து பயிற்சி மைதானம் உள்ளிட்டவைகளை சீரமைத்திடவும் அறிவுறுத்தப்பட்டது. அத்தோடு மைதானத்துக்குட்பட்ட வணிக வளாகங்களில் செயல்பட்டு வரும் கடைகளை வாடகைக்கு எடுத்து நடத்துபவர்கள் முறையாக வாடகை செலுத்துகிறார்களா என ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் விளையாட்டு மைதானத்தில் உள்ள படிப்பகம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. படிப்பகத்தின் ஒரு பகுதியில் செயல்பட்டு வரும் விளையாட்டு வீரர்களுக்கானதட்டச்சுபயிற்சி மையம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தட்டச்சுபயிற்சி மையத்தினை விரிவுப்படுத்தி விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி வழங்க மாவட்ட விளையாட்டு அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டது.

விளையாட்டு மைதானத்தினை சீரமைக்க வேண்டுமென விளையாட்டு வீரர் வீராங்கனைகள் மற்றும் தன்னார்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். அதனடிப்படையில் அண்ணா விளையாட்டு மைதானத்தில் உள்ள கூடைப்பந்து மைதானம், பெண்கள் விடுதி, பளு தூக்கும் கூடம், உடற்பயிற்சிக்கூடம், நீச்சல்குளம், கழிப்பறைகள் என பல்வேறு சீரமைப்பு பணிகள் ரூ.1.19 கோடி மதிப்பில் சீரமைக்கப்படவுள்ளது. என கூறினார்.

நடைபெற்ற ஆய்வில் மாவட்ட விளையாட்டு அலுவலர் வினு, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ஜாண் ஆசிர், பொறியாளர் ஸ்டீபன், துறை அலுவலர்கள், விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# சர்வதேச போதை பொருள் ஒழிப்பு மற்றும் கடத்தல் தடுப்பு தின விழிப்புணர்வு நிகழ்ச்சி




சேலம், ஜூன் 25

ஆண்டுதோறும் ஜூன் 26 ஆம் நாள் சர்வதேச போதை பொருள் ஒழிப்பு மற்றும் சட்ட விரோத கடத்தல் தடுப்பு தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு போதை பொருள் பயன்பாட்டின் தீமைகள் குறித்து பள்ளி கல்லூரி மாணவர்களிடையே 17.6.2026 முதல் 26.6.2026 வரை ஒரு வார காலத்திற்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்படும். தமிழ்நாட்டில் போதை பொருட்கள், மனநோய் தூண்டும் பொருட்கள் மற்றும் தடை செய்யப்பட்ட போதை பொருட்களின் விநியோகத்தை ஒழிக்க தமிழ்நாடு அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. சமூக ஊடகங்கள் இணையம், தொலைக்காட்சி, வானொலி மற்றும் அச்சு ஊடகங்கள் மூலம் இளைஞர்களிடையே போதை பொருட்கள் எதிர்ப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. போதை இல்லாத தமிழ்நாட்டை உருவாக்கும் நோக்கத்தோடு சேலம் மாவட்டத்தில் பள்ளி கல்லூரி மாணவர்கள் இடையே தொடர் விழிப்புணர்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக ஒரு முறை போதை பொருளை எடுத்துக் கொள்ளும்போது அது நமது எண்ணங்களை மாற்றி தொடர்ச்சியாக போதைப் பொருளுக்கு நம்மை அடிமையாக்கும் அவ்வாறு தொடர்ச்சியாக போதைப் பொருளுக்கு அடிமையாகும் போது நமது உடலின் பல்வேறு பாகங்களை செயல் இழக்க வைக்கும். எனவே இதுகுறித்தவிழிப்புணர்வுகளைபள்ளி, கல்லூரிமாணவ, மாணவியர்கள்மற்றும்இளைஞர்கள்இடையேகொண்டு சேர்ப்பது மிகவும் அவசியமான ஒன்றாகும். போதைப் பொருள் பயன்பாட்டிற்கு எதிரான இந்த விழிப்புணர்வு நடைபெற மாரத்தான், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், விழிப்புணர்வு கையேடுகள், பதாகைகள் மற்றும் சுவரொட்டிகள் மூலம் போதைப்பொருள் பயன்படுத்துவதை தடுக்கும் பொருட்டு போதைப் பழக்கத்திற்கு அடிமையாவதை தடுப்பது குறித்தும் விழிப்புணர்வுகள் மேற்கொள்ளப்பட உள்ளன. பொதுமக்கள் மாணவ, மாணவிகள், இளைஞர்கள் உள்ளிட்ட அனைவரும் போதைப் பொருளுக்கு எதிரான இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஒன்றிணைந்து செயல்பட்டு போதையில்லா தமிழ்நாட்டை உருவாக்கிட வேண்டுமென சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் கூறினார். இது குறித்து விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை24.6.2026இன்றுதொடங்கிவைத்துவிழிப்புணர்வு சுவரொட்டிகளை வெளியிட்டு போதைப்பொருள் பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு உறுதிமொழியினை சேலம் மாவட்ட ஆட்சியர் வாசிக்க பின் தொடர்ந்து அனைவரும் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

### பிறந்தநாளில் மது விருந்து

# பெற்றோர் கண்டித்ததால் கல்லூரி மாணவர் தற்கொலை

### நாகர்கோவில் அருகே சம்பவம்

நாகர்கோவில், ஜூன். 25

நாகர்கோவில் அருகே உள்ள பெருந்தலைக்காடு பகுதியை சேர்ந்தவர் ராஜகுமார் மகன் பென்சிங் ராஜ் (20). நாகர்கோவிலில் உள்ள ஒரு கல்லூரியில் தாவரவியல் 3ம் ஆண்டு படித்து வந்தார். கடந்த 22ஆம் தேதி பென்சிங் ராஜ் பிறந்தநாள் ஆகும். அன்றைய தினம் அவர் தனது நண்பர்களுடன் சேர்ந்து மது அருந்தி பிறந்தநாள் கொண்டாடியதாக கூறப்படுகிறது. இது குறித்து அறிந்ததும் அவரது தந்தை ராஜ்குமார் கண்டித்து, மகனுக்கு அறிவுரையும் கூறியுள்ளார்.

இது தொடர்பாக தந்தை மகனுக்கு இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதனால் வீட்டில் இருந்து கோபத்துடன் பென்சிங் ராஜ் வெளியே சென்றார். அதன் பின்னர் அவர் திரும்பி வரவில்லை. நீண்ட நேரம் ஆகியும் அவர் வராததால் அக்கம் பக்கத்தில் உறவினர்கள், நண்பர்கள் வீட்டில் பெற்றோர் தேடினர். ஆனால் அவர் குறித்து எந்த தகவலும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் நேற்று முன்தின மாலை பெருந்தலைகாடு ஆற்றின் கரையோரத்தில் பென்சிங் ராஜ் சட்டையும் அதன் அருகில் விஷபாட்டிலும் கிடந்தன. இதை அடுத்து பூதப்பாண்டி போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அந்த பகுதியை சேர்ந்த சிலர் ஆற்றில் இறங்கி தேடினர். அப்போது ஆற்றுக்குள் இறந்தநிலையில்பென்சிங் ராஜ் கடந்தார்.

உடலை வலியை மீட்டு குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். நண்பர்களுக்குமதுவிருந்து அளித்து பிறந்தநாள் கொண்டாடியதை பெற்றோர் கண்டித்ததால் விஷம் குடித்து ஆற்றில் குதித்து தற்கொலை செய்திருக்கலாம் என கூறப்படுகிறது. இதுகுறித்து பூதப்பாண்டி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். நேற்று பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. பிரேத பரிசோதனை அறிக்கை கிடைத்த பின் பென்சிங் ராஜ் எப்படி இறந்தார் என்பது தெரியவரும் என போலீசார் கூறினார்கள்.


வருவாய் கோட்டாசியர் அவர்கள்
திருப்பூர் மாவட்டம்.
நாள்:19.05.2026
ஒ.மு.2037/2026/ஆ2

திரு. கார்த்திகேயன்.
த/பெ. சுப்பிரமணியம்.
க.எண்/279
விநாயகப்பாநகர் முதல்வீதி
சோளிபாளையம்
15.வேலம்பாளையம் திருப்பூர்
மாவட்டம்.
பார்வை: மனுதாரர் திருமதி.
கார்த்திகேயன்
த/பெ. சுப்பிரமணியம். என்பவர்
மனு
நாள்:27.04.2026.

...மனுதாரர்.

இல்லை.

,,எதிர் மனுதாரர்.

பொது அறிவிப்பு

மேற்கண்ட முகவரியில் வசிக்கும் திரு. கார்த்திகேயன் என்பவரது தனது தந்தை திரு. சுப்பிரமணியம். என்பவர். கடந்த 27. 10. 2022. அன்று மேற்படி முகவரியில் இறந்தது தொடர்பாக, இறப்பினை அந்நேரத்தில் பதிவு செய்ய தவறிய நிலையில் கால தாமதக் கட்டணத்துடன் இறப்பு சான்று பதிவு செய்து தர வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு செய்துள்ளார். இம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை ஏதேனும் இருப்பின் இந்த அறிவிப்பு பிரதி வெளியான 15. நாட்களுக்குள் கனம் வருவாய் கோட்டா ட்சியர் முன்பு நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது அவசியம். தவறும் பட்சத்தில் தீர்ப்பு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

மனுதாரர்,
திரு. கார்த்திகேயன்
த/பெ. சுப்பிரமணியம்
செல்: 9789781584


DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.